# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஜனவரி மாத அவசரக்கூட்டம் 27.01.2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. எனவே மேற்படி கூட்டத்தில் நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

## 27.01.2023 ஆம் தேதிய அவசரக் கூட்டப் பொருட்கள்

## பொருள் எண்.1

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.01.2023 ஆம் தேதிய ந.க.எண்.32945/2022/EA2-SWM-14 உத்திரவில், குளச்சல் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாக்கும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து உரமாக்கும் மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.5188.91 என நிர்ணயம் செய்து இது குறித்து நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள குளச்சல் நகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் 135.05 இலட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15$^{th}$ CFC SBM Tied Grant -லிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் இதன் பொருட்டு ஏற்படும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1332-2/2017/எச்1

**தீர்மானம் எண்**.368 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த வாகனம் எண். TN 74 T 5508 பழுதடைந்து மராமத்து பணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு வேண்டி வாகனத்தை 24.11.2022 தேதி முதல் அங்கீகரிக்கப்பட்ட பணிமனையில் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், இந்நகராட்சியில் சேருகின்ற குப்பைகள் மற்றும் இதர கழிவுகளை அகற்ற தனியார் டெம்போ மூலம் குப்பைகளை அகற்ற உத்தேச செலவு ரூ.1,75,000/- க்கு செலவுகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் 24.11.2022 முதல் மேற்படி நகராட்சி வாகனம் தகுதிச்சான்று பெறும் வரை தனியார் டெம்போ மூலம் குப்பைகளை அகற்ற வேண்டி விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. ஜோசப் பில்டிங் சப்ளையர், குளச்சல் நாள் ஒன்றிற்கு ரூ.3500/-
   (தினமும் காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை)
2. ஜோர்ஷல் ஏஜென்சி, இரும்பிலி நாள் ஒன்றிற்கு ரூ.3800/-
   (தினமும் காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை)

மேற்படி இரண்டு விலைப்புள்ளிகளில் ஜோசப் பில்டிங் சப்ளையர் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.

**அ.கு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி, பொது சுகாதாரப் பணிகளில் பாதிப்பு எதுவும் ஏற்படாமல் இருக்க வேண்டி, நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 24.11.2022 முதல் பணிகள் மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1269/2022/எச்1

**தீர்மானம் எண்**.369 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.3

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.W.P(MD)No.27729/2022-னை திரு.பி.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞர் மூலம் நடத்திய வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.30,000/- மேற்படி வழக்கறிஞருக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கு.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1381/2022/சி1

**தீர்மானம் எண்**.370 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.4

குளச்சல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மணவாளக்குறிச்சியில் இயங்கி வரும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான அரிய மணல் ஆலை லிமிடெட் நிறுவனத்தில் இருந்து புதியதாக மினி டெம்போ வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் கொள்ளளவு திறனை அதிகப்படுத்த கட்டுமானப் பணிகள் செய்ய உத்தேச செலவு தொகை ரூ.50,000/- என கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.எச்1/66/2023

**தீர்மானம் எண்**.371 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.17,18,22,31,35 முதல் 39 கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள்.6,7,24,25,33 முதல் 37,38 முதல் 40, 47-52, 57-59, 60-64, கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள்.24,32 நவீன மீன் சந்தை தரைதளம் கடை எண்கள்.1,2,3,6 மற்றும் முதல் தளம் கடை எண்.6 ஆகியவற்றிற்கு 15.12.2022 மறு ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

மேற்படி பொது ஏலத்தில் கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்.7-க்கு மட்டும் இருவர் வைப்புத் தொகை செலுத்தி கலந்து கொண்டதில் திரு.A.பாபுல் உசேன், குளச்சல் என்பவர் அதிகபட்சமாக மாத வாடகை ரூ.5750/- ஏலம் கோரினார். எனவே அதிகபட்ச ஏலம் கோரிய திரு.A.பாபுல் உசேன் குளச்சல் அவர்களுக்கு கடையினை ஒப்படைக்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.மேலும் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்றும் 01.01.2023 முதல் கடையினை ஒப்படைத்தமைக்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

மேலும் ஏலம் போகாத கடைகளை மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்**.372 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

இந்நகராட்சி தணிக்கை அறிக்கை 2009 முதல் 2019 வரை உயர்மட்ட குழு கூட்டம் மற்றும் மாதாந்திர தணிக்கை கூட்டத்திற்கு பதிலறிக்கை கொண்டு செல்வதற்கு நகல் மற்றும் Booklet Spiral Binding செய்த வகைக்கு ரூ.7565/- மற்றும் இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு Numbering Machine (Mono) 1 வாங்கிய வகைக்கு ரூ.4800/- தாசன் ஆப்பெட் குளச்சல் நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.942/2012/எச்1

**தீர்மானம் எண்**.373 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 கதவு எண்.1-277,1-278 வரிவிதிப்பு எண்கள். 148/003/900150, 148/003/900151 வரிவிதிப்பாளர் பெயர் பொது மேலாளர் (BSNL) தொலைபேசி நிலையம் கட்டிடத்திற்கு சொத்துவரி அதிகமாக நிர்ணயம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கு எண்.Rev.App (MD) No.77 to 84 of 2018 in WA (MD) No.328 to 335 of 2018 & CMP (MD) No.6801 to 6808 of 2018 நாள்

21.12.2018-ன் படி மனுதாரருடைய கட்டிடத்தினை மறு அளவீடு செய்து 19.04.2011 ஆம் தேதியிலிருந்து வரி நிர்ணயம் செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மதுரை உயர்நீதி மன்ற மதுரை கிளை நகராட்சி நிலையான வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரு பெறப்பட்டது. மேற்படி சட்ட கருத்துருவின் படி, தற்போதைய மண்டல மதிப்பீட்டின் படி BSNL நிர்வாக கட்டிடத்திற்கு 19.04.2011 ஆம் தேதியிலிருந்து வரிவிதிப்பு எண்கள். 148/003/900150, 148/003/900151-க்கு மண்டலம் ‘C’ அடிப்படையில் கீழ்க்கண்ட விவரப்படி வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நீதிமன்ற தீர்ப்பின் மீதான சட்ட கருத்துரு படி 2011-2012 முதலாம் அரையாண்டு முதல் BSNL அலுவலக கட்டிடத்திற்கு திருத்திய கேட்பு பின்வருமாறு,**

**I <u>BSNL அலுவலக கட்டிடம்</u>**

| வ.எண் | வரிவிதிப்பு எண் | வருடம் | திருத்தம் செய்யப்பட வேண்டிய கேட்பு தொகை |
|---|---|---|---|
| 1 | 148/003/900150 | 2011-2012 I,II | 16900 |
| | | 2012-2013 I,II | 16900 |
| | | 2013-2014 I,II | 16900 |
| | | 2014-2015 I,II | 16900 |
| | | 2015-2016 I,II | 16900 |
| | | 2016-2017 I,II | 16900 |
| | | 2017-2018 I,II | 16900 |
| | | 2018-2019 I,II | 16900 |
| | | 2019-2020 I,II | 16900 |
| | | 2020-2021 I,II | 16900 |
| | | 2021-2022 I,II | 16900 |
| | | 2022-2023 I,II | 33800 |
| | | **மொத்தம்** | **219700** |

**II <u>BSNL குடியிருப்பு கட்டிடம்</u>**

| வ.எண் | வரிவிதிப்பு எண் | வருடம் | திருத்தம் செய்யப்பட வேண்டிய கேட்பு தொகை |
|---|---|---|---|
| 1 | 148/003/900151 | 2011-2012 I,II | 4208 |
| | | 2012-2013 I,II | 4208 |
| | | 2013-2014 I,II | 4208 |
| | | 2014-2015 I,II | 4208 |
| | | 2015-2016 I,II | 4208 |
| | | 2016-2017 I,II | 4208 |

| | | | |
|---|---|---|---|
| | | 2017-2018 I,II | 4208 |
| | | 2018-2019 I,II | 4208 |
| | | 2019-2020 I,II | 4208 |
| | | 2020-2021 I,II | 4208 |
| | | 2021-2022 I,II | 4208 |
| | | 2022-2023 I,II | 8416 |
| | | **மொத்தம்** | **54704** |

ஏற்கனவே மேற்படி கட்டிடத்திற்கு 2000-2001 இரண்டாம் அரையாண்டு முதல் 2022-2023 II அரையாண்டு வரி இரண்டு வரிவிதிப்பு எண்களுக்கு கணணியில் கேட்பு SUC நீங்கலாக ரூ.35,78,763/- (ரூ.3216942 + 361821) நிலுவையாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

**<u>A வரிவிதிப்பு எண். 148/003/900150 அலுவலக கட்டிடம்</u>**

| நிதியாண்டு | சொத்துவரி (ரூ.) |
|---|---|
| 2000-2001 II | 52308 |
| 2001-2002 I, II | 104616 |
| 2002-2003 I, II | 104616 |
| 2003-2004 I, II | 104616 |
| 2004-2005 I, II | 104616 |
| 2005-2006 I, II | 104616 |
| 2006-2007 I, II | 104616 |
| 2007-2008 I, II | 104616 |
| 2008-2009 I, II | 156924 |
| 2009-2010 I, II | 156924 |
| 2010-2011 I, II | 156924 |
| 2011-2012 I, II | 156924 |
| 2012-2013 I, II | 156924 |
| 2013-2014 I, II | 156924 |
| 2014-2015 I, II | 156924 |
| 2015-2016 I, II | 156924 |
| 2016-2017 I, II | 156924 |
| 2017-2018 I, II | 156924 |
| 2018-2019 I, II | 156924 |
| 2019-2020 I, II | 156924 |
| 2020-2021 I, II | 156924 |
| 2021-2022 I, II | 156924 |
| 2022-2023 I, II | 235386 |

| மொத்தம் | 3216942 |
|---|---|

B. வரிவிதிப்பு எண்.148/003/900151 குடியிருப்பு கட்டிடம்

| நிதியாண்டு | சொத்துவரி (ரூ.) |
|---|---|
| 2000-2001 II | 5883 |
| 2001-2002 I,II | 11766 |
| 2002-2003 I,II | 11766 |
| 2003-2004 I,II | 11766 |
| 2004-2005 I,II | 11766 |
| 2005-2006 I,II | 11766 |
| 2006-2007 I,II | 11766 |
| 2007-2008 I,II | 11766 |
| 2008-2009 I,II | 17650 |
| 2009-2010 I,II | 17650 |
| 2010-2011 I,II | 17650 |
| 2011-2012 I,II | 17650 |
| 2012-2013 I,II | 17650 |
| 2013-2014 I,II | 17650 |
| 2014-2015 I,II | 17650 |
| 2015-2016 I,II | 17650 |
| 2016-2017 I,II | 17650 |
| 2017-2018 I,II | 17650 |
| 2018-2019 I,II | 17650 |
| 2019-2020 I,II | 17650 |
| 2020-2021 I,II | 17650 |
| 2021-2022 I,II | 17650 |
| 2022-2023 I,II | 26476 |
| **மொத்தம்** | **361821** |

## அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. BSNL கட்டிடத்திற்கு கணணியில் நீதிமன்ற தீர்ப்பின் மீதான சட்ட கருத்துரு படி, வரிவிதிப்பு எண்கள்.148/003/900150 மற்றும் 148/003/900151 ஆகிய வரியினங்களுக்கு கணணியில் 2011-12 I அரையாண்டு முதல் கேட்பு திருத்தம் செய்யலாம்.
3. 2011-2012 முதலாம் அரையாண்டிற்கான வரிவிதிப்பு எண். 148/003/900150 கேட்பு தொகை ரூ.1255392/- மற்றும் வரிவிதிப்பு எண். 148/003/900151 கேட்பு தொகை

ரூ.141195 ஆக மொத்தம் ரூ.1396587/- ஏற்கனவே உள்ள கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.01/3232/2002

**தீர்மானம் எண்**.374 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.8

இந்நகராட்சி வார்டு குழு மற்றும் பகுதி சபா நடத்துவதற்கு Flex Banner அச்சிடுவதற்கு ரூ.1000/- மற்றும் ரூ.1500/- செலவு செய்யப்பட்டது. மேலும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மின் அஞ்சல் மூலம் பெறப்பட்டதின்படி, புதுமை பெண் திட்டத்தின் விளம்பர பலகை வைப்பதற்காக Flex-க்கு ரூ.800/- மற்றும் ரூ.1250/- செலவு செய்யப்பட்டது என மொத்தம் ரூ.4550/- தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

மேற்கண்ட பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமைப்பு ஆய்வாளரால் செலவு செய்யப்பட்ட தொகையினை அவரது பெயரில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1142/2022/TPI

**தீர்மானம் எண்**.375 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.9

இந்நகராட்சி வார்டு குழு மற்றும் பகுதி சபா நடத்துவதற்கு குழு நடவடிக்கைகள் பதிவு செய்ய பதிவேடுகள் 45 எண்ணம் தாசன் ஆப்பெட், குளச்சல் அவர்களிடமிருந்து பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் அச்சகத்திலிருந்து பெறப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.4275/- வழங்க அன்னார் பட்டியல் சமர்ப்பித்துள்ளார். ஆகவே ரூ.4275/- தொகை திரு.தாசன் அச்சகம், குளச்சல் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1142/2022/TPI

**தீர்மானம் எண்**.376 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்கு சொந்தாமான டாக்டர் அம்பேத்கர் தினசரிசந்தை வரிவிதிப்பு எண்.148/BD01/00016 கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2022-2023-ம் ஆண்டிற்கு திரு.கென்னடி என்பவருக்கு குத்தகை தொகை ரூ.5,25,630/- உரிமம் புதுப்பித்து வழங்கப்பட்டது. ஆனால் குத்தகை கேட்புத்தொகை கணணியில் தவறுதலாக ரூ.5,90,389/- என பதிவாகி உள்ளது.

எனவே கணணியில் தவறுதலாக பதிவாகி உள்ள வித்தியாச கேட்புத்தொகை ரூ.64,759/-ஐ நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்**.377 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிகவளாகம் கடை எண்கள் 37-37,60-64, வரி விதிப்பு எண். 148/2009006-ல் தொலைபேசி நிலைய அலுவலகம் செயல்பட்டு வந்தது. மேற்படி நிறுவனம் ஜீலை 2020-ல் கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் நிறுவனத்திற்கு கேட்பு தவறுதலாக ஏப்ரல் 2021 முதல் ஜீன் 2021 வரைக்கும் ரூ.25641/- பதிவாகி உள்ளது. எனவே கணணியில் தவறுதலாக பதிவாகி உள்ள தொகையினை ரூ 25641/- நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.அ3/4430/2007

**தீர்மானம் எண்**.378 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி